**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.72/2017**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஷோபனா | Caste | : |
| Father ‘s Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A1 to 4 present. A5 absent. PFA )

**05.07.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது சைபர் கிரைம் காவல் நிலையம் வடக்கு மண்டலம் சென்னை பெருநகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 21.11.2006 அன்று 11.45 மணிக்கு திருநகர் காவல் நிலையத்தில் பொறுப்பு பணியில் இருந்தபோது மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நகர் காவல் நிலைய குற்ற எண். 445/2006, ச/பி. 420,465,468 உ/இ 120 பி இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.24 ஆகும். அதை புகாருடன் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அந்த வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு தமிழ்நாடு மின்சார வாரியம் மதுரைக்கு வழக்கு சம்பந்தமாக எதிரிகள் ஈபி வாங்கியது சம்பந்தமாக ஆவணங்களை தருமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்பு பணி மாறுதலில் சென்றதால் வழக்கினை சார்பு ஆய்வாளர் திரு. பாலசுப்பிரமணியன் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி இல்லை.**